# உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை சார்பில் நுகர்வோருக்கு விழிப்புணர்வு



36வது இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சி 2010ம் ஆண்டிற்கான பொருட்காட்சி சென்னை தீவுத்திடலில் விமரிசையாக நடைபெற்று வருகிறது.

அரசுத் துறை அரங்கங்களில் கூட்டுறவுத்துறை அரங்கின் ஒரு பகுதியாக உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை சார்பில் நுகர்வோருக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் பொருட்டு அரங்கம் அமைத்து செயல்பட்டு வருகிறது.

1) அரங்கம் முழுவதும் நுகர்வோர் உரிமைகள்– கடமைகள் நுகர்வோர் பாதுகாப்பு சட்டம், நுகர்வோர் குறைதீர் மன்றத்தின் அளிக்கப்படும் நிவாரணங்கள், மாநில நுகர்வோர் சேவை மையம் செயல்பாடுகள், பொது விநியோக திட்ட புள்ளி விவரங்கள் ஆகியன காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

2) நுகர்வோர் விழிப்புணர்வு குறித்து குறும்படங்க்ள அரங்கில் தொலைக்காட்சி பெட்டி வழியே தொடர்ந்து காண்பிக்கப்படுகிறது.

3) உணவு பொருட்களில் கலப்படம் கண்டறிய எளிய முறை மற்றும் கலப்படத்தினால் ஏற்படும் தீமைகள் குறித்து செயல்முறை விளக்கத்துடன் செய்து காட்டப்படுகிறது.

4) நுகர்வோர் விழிப்புணர்வு குறித்து தகவல் தொகுப்பு கையேடு அரங்கை காணவரும் பொதுமக்களுக்கு விநியோகிக்கப்படுகிறது.

5) அரங்கின் வெளியே நுகர்வோர் விழிப்புணர்வு குறித்த குறும்படங்கள் சுழற்சி முறையில் திரையிடப்படுகிறது.

உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறையுடன் இணைந்து பெட்காட் பயிற்றுனர் திருமதி. எஸ். தமிழ்ச்செல்வி அரங்கில் கலப்படம் குறித்த செயல்முறை விளக்கம் செய்து காட்டுவதுடன், பொதுமக்களுக்கு ஏற்படும் சந்தேகங்களுக்கு விளக்கமும் சிறப்பான முறையில் கொடுக்கப்பட்டு வருகிறது.

நுகர்வோர் தங்களின் கருத்துக்களை பதிவு செய்ய அரங்கில் பதிவேடு பராமரிக்கப்பட்டள்ளது. இவ்வரங்கின் மூலம் பொதுமக்கள் அனைவரும் அதிக பயனுள்ள தகவல்களை பெற்றுள்ளதாக குறிப்பிட்டுள்ளனர்.

